அரசால் உடனடி நிவாரணம் (Relief and Response) என்ற தலைப்பின்கீழ் மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-0.5

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் பெற்றுத் தருவதிலும், நிவாரணப் பணிகளை முழுமையாக நிறைவேற்றுவதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதுமே முனைப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கிடைத்த வெற்றி என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

பேரவை விதி 224-ன்படி ஏற்கெனவே அனுமதி மறுக்கப்பட்ட ஒரு பிரச்சினையை அவையில் எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன புகழேந்தி, சொல்லுங்கள்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. அனுமதி ஏற்கெனவே மறுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. ஏற்கெனவே அனுமதி மறுக்கப்பட்டு, உங்களிடத்திலே கையெழுத்து வாங்கப்பட்டிருக்கிறது. அதை எழுப்புவதற்கு இப்போது இடமில்லை. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அனுமதி மறுப்பதற்கு பேரவைத் தலைவருக்கு முழு உரிமையும் உண்டு. பேரவை விதி

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

224-ன்கீழ் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அனுமதி மறுத்த ஒன்றைப் பேரவையில் எழுப்புவதற்கு நிச்சயமாக நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள்.

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாக் காலத்திலும் பின்பற்றக்கூடிய (குறுக்கீடுகள்) துரைமுருகன் (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே அனுமதி மறுத்திருக்கிறேன். ஏற்கெனவே அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பிலே எதுவும் ஏறாது. ஏற்கெனவே பின்பற்றப்படக்கூடிய விதிமுறைகளின் அடிப்படையில், 224-வது விதியின்கீழ் தாங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பேரவையில் எழுப்புவதற்கு அனுமதி கிடையாது. ஆகவே, விதியைத் தாங்கள் மீறாதீர்கள். அனுமதி கிடையாது. திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) உங்களுக்கும், எனக்கும் பேரவை விதி என்பது பொது. விதிகளை மீறி யாரும் செயல்பட முடியாது. (குறுக்கீடு) பேரவை விதி என்பது, துரைமுருகனுக்கும் பொது, எனக்கும் பொது. அந்த விதியின் அடிப்படையில், 224-வது விதியின் அடிப்படையில் நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்த ஒன்றை எப்படிப் பேரவையிலே எழுப்புவது? (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. திரு. கோவை தங்கம்.

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன், இதுகுறித்து உங்களுக்கு ஏதாவது ஐயப்பாடு இருக்குமானால், எந்த அடிப்படையிலே நான்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அனுமதி மறுத்தேன் என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால், அறையிலே வந்து கேளுங்கள். முழு விளக்கத்தையும் நான் சொல்கிறேன். திரு. கோவை தங்கம். *(குறுக்கீடுகள்)* துரைமுருகன், தயவுசெய்து உட்காருங்கள். நான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* பொன்முடி, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பெரிய Speaker ஒன்றும் இல்லை, சட்டமன்றத்திற்குத்தான் Speaker. *224*-வது விதியினுடைய அடிப்படையிலே தாங்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையிலே அந்த அனுமதி மறுக்கப்பட்டது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால், தாராளமாக என் அறைக்கு வாருங்கள், முழு விளக்கத்தையும், முழு விவரங்களையும் நான் சொல்கிறேன். அவையினுடைய நேரத்தை வீணாக்க வேண்டாம். *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 11-10

4. கவன ஈர்ப்பு

கோயம்புத்தூர் மாவட்டம், சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியையும் முடீஸ் அரசு உயர்நிலைப் பள்ளியையும் தரம் உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் முடீஸ் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றைத் தரம் உயர்த்துவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.